# வலுவான ஒன்ராறியோவை ஒருமித்து உருவாக்குதல்

## *மாகாணம் முழுவதற்குமான வளர்ச்சியை ஒன்ராறியோவின் 2023 இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கை ஆதரிக்கிறது*

றொறன்ரோ - இன்று நிதியமைச்சர் Peter Bethlenfalvy *ஒன்ராறியோவின் 2023 க்கான பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வை* வெளியிட்டார் *வலுவான ஒன்ராறியோவை ஒருமித்து உருவாக்குதல்* தற்போதைய பொருளாதார நிச்சயமற்ற தன்மையை நிவர்த்தி செய்வதற்கும், வளர்ந்து வரும் சமூகங்களில் முக்கியமான உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கும், எதிர்காலச் சந்ததியினருக்கு வலுவான நிதி அடித்தளத்தை அமைப்பதற்கும் தேவையான நெகிழ்வுத்தன்மையையும் கொண்ட இந்தப் புதுப்பிப்பு, அரசாங்கத்தின் பொறுப்பான, இலக்குடன் கூடிய அணுகுமுறையின் தொடர்ச்சியாக உள்ளது.

ஒன்ராறியோ குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டு வருகிறது, கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 500,000 பேர் வரையில் இம்மாகாணத்திற்கு வந்துள்ளனர் மற்றும் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் 170,000 க்கும் அதிகமான புதிய வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

"எங்கள் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது, வேலைகள் உருவாக்கப்படுகின்றன, மேலும் அதிகமான நிறுவனங்கள் ஒன்ராறியோவை வணிகம் செய்வதற்கான இடமாகத் தேர்ந்தெடுக்கின்றன" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "இது நல்ல செய்தி என்றாலும், புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற நேரத்தில் இதை வெகு சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. முன்னோக்கிச் செல்லும் பாதையின் தேர்வு தெளிவாக உள்ளது. எங்கள் அரசாங்கத்தின் இலக்குடன் கூடிய அணுகுமுறையை நாம் தொடர வேண்டும் - ஒன்ராறியோ முழுவதும் வளர்ந்து வரும் சமூகங்களுக்கு ஆதரவளிக்கும் முக்கியமான உட்கட்டமைப்பை உருவாக்க முதலீடு செய்யும் அதேவேளையில் நமக்குத் தேவையான நெகிழ்வுத்தன்மையையும் அது கொண்டுள்ளது.

*வலுவான ஒன்ராறியோவை ஒருமித்து உருவாக்குவதன்* மூலம், முக்கியமான உட்கட்டமைப்புகளை விரைவாகவும், புத்திசாலித்தனமாகவும் உருவாக்குவதற்கும், முதலீடுகள் மற்றும் அதிக வேலைகளைத் தொடர்ந்து ஈர்ப்பதற்கும், மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதற்கும் அரசாங்கம் புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துகிறது.

சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- ஒன்ராறியோ உட்கட்டமைப்பு வங்கியைத் (Ontario Infrastructure Bank) தொடங்குதல், இது பொதுத் துறை ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் பிற நம்பகமான நிறுவன முதலீட்டாளர்கள் பெரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்களில் பங்கேற்பதற்காகச் சபை அங்கத்தவர்களால் நிர்வகிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் கைக்கெட்டும் தொலைவிலுள்ள ஒரு புதிய நடவடிக்கையாகும். தொடக்கத்தில், இந்தத் திட்டங்கள் நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்கள், மானிய விலை வீடுகள் மற்றும் நகராட்சி, சமூகம், எரிசக்தி மற்றும் போக்குவரத்துத் துறைகளின் உட்கட்டமைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- புதிய நோக்கத்திற்காக கட்டப்படும் தகுதி பெறும் வாடகை வீடுகளுக்கு Harmonized Sales Tax இன் (இணக்கமான விற்பனை வரி - HST) முழு எட்டு சதவீத மாகாணப் பகுதியை நீக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் அதிக வாடகை வீடுகளைக் கட்ட உதவுதல். இது வீடுகட்டுபவர்களை அதிக வாடகை அலகுகளை உருவாக்க ஊக்குவிக்கும், அத்துடன், ஒன்ராறியோவில் உள்ள மக்கள் கட்டுப்படியாகக்கூடிய வசிப்பிடத்தைக் கண்டுபிடித்து வாங்க உதவுவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தில் இது மற்றொரு படியாகும்.
- மொத்தத் தொகையை $500 மில்லியன் ஆக்குவதற்கு ஒன்ராறியோவில் முதலீடு நிதிக்கு (Invest Ontario Fund) மேலதிகமாக $100 மில்லியனை வழங்குதல், இது அரசாங்கத்தின் முதலீட்டு ஈர்ப்பு நிறுவனமான ஒன்ராறியோவில் முதலீடு (Invest Ontario) எனும் தாபனம் மேலும் பல முன்னணி நிறுவனங்களை மாகாணத்தை நோக்கி ஈர்ப்பதற்கு உதவும், அதனால் ஏற்கனவே இங்குள்ள வணிகங்களுக்கு மேலும் ஆதரவளித்து மாகாணம் முழுவதிலும் உள்ள சமூகங்களில் நல்ல ஊதியம் வழங்கும் வேலைகளை உருவாக்க உதவும்.
- முக்கியமான கனிம ஆய்வைத் தூண்டுவதற்கும், சிறிய ஆய்வு நிறுவனங்களுக்கான மூலதன அணுகலை மேம்படுத்துவதற்கும் Ontario Focused Flow-Through Share Tax Credit க்குரிய (ஒன்ராறியோவை மையப்படுத்திய பங்கு வரிக் கடன்) தகுதியை மேம்படுத்துவதற்கு முன்மொழிதல். அங்கீகரிக்கப்பட்டால், இந்த மாற்றம் 2023 வரி ஆண்டிலிருந்து தொடங்கும் மற்றும் ஒன்ராறியோவின் முக்கியமான கனிம சுரங்கத் தொழிலுக்கு ஆண்டுக்கு $12 மில்லியன் வரிக் கடன் ஆதரவைச் சேர்க்கும்.
- தற்போதைய எரிவாயு மற்றும் எரிபொருள் வரி விகிதக் குறைப்புகளை ஜூன் 30, 2024 வரை நீட்டித்தல்—உத்தேச மாற்றம், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கட்டணக் குறைப்புகளுடன், ஜூலை 2022 இல் வெட்டுக்கள் முதன்முதலில் அமுல்படுத்தப்பட்டதிலிருந்து குடும்பங்களுக்குச் சராசரியாக $260 தொகையைச் சேமித்துக் கொடுக்கும்.
- ஒன்ராறியோ மார்பகப் பரிசோதனைத் திட்டத்தின் (Ontario Breast Screening Program) சுய-பரிந்துரையின் பேரில் மமோகிராமிற்கு (mammogram) அனுமதிப்பதன் மூலம், 40 முதல் 49 வயதுடைய பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனைக்கான அணுகலை விரிவுபடுத்துதல். 2024 இலையுதிர்காலத்தில் தொடங்கி, இந்த நடவடிக்கைகள் 305,000 க்கும் மேற்பட்ட கூடுதல் நபர்களுக்கான அணுகலை அதிகரிக்கும்.

"முன்னோக்கிச் செல்லும் பாதை எளிதானது அல்ல, ஆனால் ஒன்ராறியோ மக்கள் இணைந்து என்ன சாதிக்க முடியும் என்பதை நாங்கள் பார்த்திருக்கின்றோம்" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "ஒன்றாக, இன்றைய நிச்சயமற்ற தன்மையை நாம் எதிர்கொண்டு வலுவான ஒன்ராறியோவை உருவாக்க எம்மால் முடியும்."

## *விரைவுச் செய்திகள்*

- புதுப்பிக்கப்பட்ட பொருளாதார மற்றும் வருவாய்த் தகவல்களின் அடிப்படையில் 2023–24இல் $5.6 பில்லியன் தொகைப் பற்றாக்குறையையும் மற்றும் அண்மைக் காலத்தில் ஏற்படும் அபாயங்களைக் குறைப்பதற்கான அதிக முன்னெடுப்புகளையும் அரசாங்கம் இப்போது கணிப்பிட்டுள்ளது.
- நடுத்தர காலத்தில், ஒன்ராறியோவின் பற்றாக்குறையை 2025–26க்குள் நீக்குவதற்கு அரசாங்கம் பொறுப்பான அணுகுமுறையை எடுத்து வருகிறது. 2024-25இல் $5.3 பில்லியன் பற்றாக்குறையும் அதைத் தொடர்ந்து 2025-26ல் $0.5 பில்லியன் உபரியும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## மேலதிக வளங்கள்

- *2023 ஒன்ராறியோப் பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வு: வலுவான ஒன்ராறியோவை ஒருமித்து உருவாக்குதல்*
- வாசிக்கவும் *Backgrounder: பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வு*
- வாசிக்கவும்*Backgrounder: ஒன்ராறியோ உட்கட்டமைப்பு வங்கியைத் தொடங்குதல்*
- வாசிக்கவும்*லுவான ஒன்ராறியோவை ஒருமித்து உருவாக்குதல் - சிறப்பம்சங்கள்*
- வாசிக்கவும்*ஒன்ராறியோவின் 2023ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம்: வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல்*
- ஒன்ராறியோ உட்கட்டமைப்பு வங்கி

---

**ஊடகத் தொடர்புகள்**

ontario.ca/finance-news
*Disponible en français*

Emily Hogeveen
அமைச்சர் அலுவலகம்
647-294-6166
Emily.Hogeveen@ontario.ca

Scott Blodgett
தகவற் தொடர்புப் பிரிவு
416-728-9791
Scott.Blodgett@ontario.ca